**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

Case No.CC. 187/2019

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | அறிவழகன் | Prosecution | LW-4 as PW3 |
| Father Name | விஸ்வநாத் | Defence | |
| Village | ஆதமங்களம் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 52/2025 |

Solemnly affirmed by Tmt.R.Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**02.08.2025**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. நீதிமன்றத்தில் தற்போது என்னிடத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள சாட்சி கையொப்பங்களில் என்னுடையது எதுவும் இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கருப்பையா மகன் வெங்கடேசன் என்பவரையும் எனக்கு தெரியும். இருவரும் எனது ஊரை சேர்ந்தவர்கள். கடந்த 19.06.2018 ம் தேதி காலை 11.00 மணிக்கு நானும் வெங்கடேசன் என்வரும் சம்பவ இடத்தில் நின்றிருந்த போது வைத்தீஸ்வரன் கோயில் போலிசார் எங்கள் முன்னிலையில் பார்வை மகசர் தயார் செய்தார்கள் என்றாலும் அதற்குசாட்சியாக நானும் அறிவழகன் என்வரும் கையொப்பம் செய்தோம் என்றாலும் சரியல்ல. மேற்படி விபரங்களை போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

Case No.CC. 187/2019

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | வெங்கடேசன் | Prosecution | LW-3 as PW2 |
| Father Name | கருப்பையா | Defence | |
| Village | ஆதமங்களம் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 54/2025 |

Solemnly affirmed by Tmt.R.Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**<u>02..08.2025</u>**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. நீதிமன்றத்தில் தற்போது என்னிடத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள சாட்சி கையொப்பங்களில் என்னுடையது எதுவும் இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். விஸ்வநாதன் மகன் அறிவழகன் என்பவரையும் எனக்கு தெரியும். இருவரும் எனது ஊரை சேர்ந்தவர்கள். கடந்த 19.06.2018 ம் தேதி காலை 11.00 மணிக்கு நானும் அறிவழகன் என்வரும் சம்பவ இடத்தில் நின்றிருந்த போது வைத்தீஸ்வரன் கோயில் போலிசார் எங்கள் முன்னிலையில் பார்வை மகசர் தயார் செய்தார்கள் என்றாலும் அதற்குசாட்சியாக நானும் அறிவழகன் என்வரும் கையொப்பம் செய்தோம் என்றாலும் சரியல்ல. மேற்படி விபரங்களை போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

Case No.CC. 187/2019

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | அன்பழகன் Rtd.SSI | Prosecution | LW–1 as PW1 |
| Father Name | கோவிந்தசாமி | Defence | |
| Village | சிதம்பரம் | Taluk | சிதம்பரம் |
| District | கடலூர் | Age | 50/2025 |

Solemnly affirmed by Tmt.R.Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**02..08.2025**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

1. நான் வைத்தீஸ்வரன் கோவில் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து 2019 ஆம் வருடத்தில் பணி ஓய்வு பெற்றேன். இந்த வழக்கு சமயத்தில் நான் மேற்படி காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது, கடந்த 19.06.2018ம் தேதி காலை 7.00 மணிக்கு என்னுடன் சிறப்பு உதவி ஆய்வாளர்கள் கோபாலகிருஷ்ணன் சிறப்புஉதவி ஆய்வாளர் திரு பாஸ்கர் என்பவர் தலைமையில் மேற்படி காவல் நிலைய எல்லையில் உள்ள ஆதமங்கலம், உப்பன் ஆற்று பாலம் அருகே ரோந்து சென்றபோது TN 25 AF 3802 என்கிற பதிவெண் கொண்ட John Deer Tractor வாகனம் மற்றும் அதோடு இணைந்த TN 51 M 7250 என்கிற பதிவெண் கொண்ட டிரைலருடன் வந்தது. அந்த டிராக்டரை ஆஜர் எதிரி ஓட்டி வந்தார். (சாட்சி எதிரியை அடையாளம் காட்டினார்).

2.அந்த வாகனத்தை சோதனை செய்தபோது, அதில் ஒரு யூனிட் ஆற்று மணல் இருந்தது. அவரிடம் அரசாங்க உரிமம் பற்றி கேட்டபோது அவர் தனக்கு அரசு அனுமதியோ உரிமமோ இல்லை என்று கூறினார். அதன் பிறகு நானும் கோபாலகிருஷ்ணனும் கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் செய்து மேற்படி வாகனத்தை கைப்பற்றினோம். எதிரியையும் அவர் வாகனத்தையும் சுமார் 10.00 மணிக்கு காவல் நிலையம் அழைத்து வந்து, சிறப்பு உதவி ஆய்வாளர் பாஸ்கர் என்பவரிடம் ஒப்படைத்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 2வது கையொப்பம் என்னுடையதுதான். (அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). இவ் வழக்கு சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை:**

1. பொதுவாக வைத்தீஸ்வரன் கோவில் காவல் நிலையத்தில் தினசரி Roll Call எத்தனை மணிக்கு நடைபெறும் என்றால் காலை 7-8 மணி வரை நடைபெறும். அவ்வாறு Roll Call முடிந்தவுடன் தான் பொதுவாக வெளி வேலைகளுக்கு அல்லது ரோந்துக்கு செல்வோம் என்றால் சரிதான். சம்பவத்தன்று நான், சிறப்பு உதவி ஆய்வாளர்கள் பாஸ்கர் மற்றும் கோபாலகிருஷ்ணன் ஆகிய மூவரும் ரோந்துக்கு சென்றோமா என்றால் ஆமாம். பொதுவாக ரோந்துக்கு செல்வதற்கு முன்பு காவல் நிலைய பொது நாட்குறிப்பில் அது பற்றி குறித்து வைத்துவிட்டு தான் செல்வோமா என்றால் ஆமாம். சம்பவத்தன்று நாங்கள் ரோந்து சென்றது பற்றி நாட்குறிப்பில் குறிக்கப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி உதவி ஆய்வாளரை தான் கேட்க வேண்டும். எனக்கு தெரியாது. மேற்படி பொது நாட்குறிப்பை இவ்வழக்கில் தாக்கல் செய்ய தயாரா என்றால் தேவைப்பட்டால் தாக்கல் செய்யலாம். அது காவல் நிலையத்தில்தான் இருக்கும்.

2. கைப்பற்றுதல் மகஜரில் நான் எந்த அடிப்படையில் மேற்படி வாகனத்தில் 1 யூனிட் மணல் இருந்தது எனக் குறிப்பிட்டேன் என்றால் சிறப்பு உதவி ஆய்வாளர் பாஸ்கரன் அவர்கள் சொன்னதன் பேரில் நான் அவ்வாறு குறிப்பிட்டேன். அவ்வாறு 1 யூனிட் மணல் அந்த வாகனத்தில் இருந்ததா என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சம்பவ இடத்தில் நிறைய வீடுகள் இருக்கிறது என்றால் சரிதான். அந்தப் பகுதியில் வசிக்கும் நபர்கள் எவரையும் அழைத்து மகஜர் சாட்சியாக வைத்துக் கொள்ளவில்லை என்றால் சரிதான். சிறப்பு உதவி ஆய்வாளர் பொதுமக்களை கூப்பிட்டு பார்த்தார். யாரும் வரவில்லை என்பதால் எங்களை சாட்சிகளாக இருக்க சொல்லிவிட்டார்.

3.உண்மையில் சம்பவத்தன்று நான் மற்றும் இதர உதவி ஆய்வாளர்கள் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் புள்ளி விவர கணக்கிற்காக எதிரியையும் அவர் வாகனத்தையும் பிடித்து பொய் வழக்கு போட்டு உள்ளோம் என்றாலும் சரியல்ல. உண்மையில் சம்பவம் நடந்திருந்தால், நாங்கள் அந்தப் பகுதி மக்களை சாட்சியாக சேர்த்திருப்போம் என்றாலும் இது பொய் வழக்கு என்பதால் தான் அனைத்து சாட்சிகளும் காவல்துறை சாட்சிகளாக உள்ளார்கள் என்றாலும் சரியல்ல. நான் எந்த ஆவணத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் சீசர் போலீஸ் மகஜர் ஆவணத்தில் கையொப்பம் செய்தேன். எதிரியின் பெயர் என்ன என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும் இது போலீசால் ஜோடிக்கப்பட்ட வழக்கு என்றாலும் சரியல்ல. நாங்கள் 7-8 வரை Roll Call Attend செய்த நிலையில், 7 மணிக்கு சம்பவ இடத்தில் வைத்து எதிரியை கைது செய்து வாகனத்தை கைப்பற்றியதாக சொல்வது நம்பும்படியாக

இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரி அல்ல.

**மறுவிசாரணை இல்லை.**